**நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(10.08.2016 முதல் 14.08.2016 வரை)**
**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**
போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881

==========================================================================================

**தேதி:09.08.16**

**கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (05.08.2016– 09.08.2016)**

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 3.0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 35-39 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27-28 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 2-8 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 64-74 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8-13 |

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 10.08.2016 | நாள் 2 11.08.2016 | நாள் 2 12.08.2016 | நாள் 4 13.08.2016 | நாள் 5 14.08.2016 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 38 | 38 | 38 | 38 | 38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 60-70 | 60-70 | 60-70 | 60-70 | 60-70 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

- 10.08.2016 முதல் 14.08.2016 வரை வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை இல்லை.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி**

**பருவம் : குறுவை : தண்டு உருளும் பருவம் சம்பா : நிலம் தயாரித்தல் மற்றும் விதைத்தல்.**

- குறுவை நெற்பயிரில் தூர்கட்டும் பருவத்தில், 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 25 கிலோ யூரியாவையும், சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும்.

- ஆகஸ்ட் 2ம் வாரத்தில் முன்பட்ட சம்பாவிற்கு சி.ஆர். 1009 மற்றும் ஆடுதுறை 50 என்ற இரகங்களை நாற்றுவிட சிபாரிசு செய்யப்படுகிறது.

- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.

.

**இயக்குநர்**